1989 மே 11]

திரு. உ. ரா. வரதராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த கால ஆட்சியில் விளையாட்டு அரங்கங்கள் துவக்கப்படுவதற்கான அறிவிப்பு செய்யப்பட்டு அமல்படுத்தப் படாமல் பல உள்ளன. அதைப்பற்றி அரசு அறியுமா? அவற்றை அமல்படுத்துவதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, வாய்ப்புள்ளபோது கவனிக்கப்படும்.

விழுப்புரம் கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரியில் முதுகலைப் பட்டப்படிப்பு.

235—(* வினா எண். 967) திரு. ஏ. ஜி. சம்பத்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரியில் முதுகலைப் பட்டப்படிப்பு துவங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இப்பொருள் குறித்து கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

திருப்பூர் நகரில் ரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்துதல்

236—(* வினா. எண். 961) திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் மையப் பகுதியிலுள்ள ரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம் சுமார் 2, 3 லட்சம் மக்கள் வசிக்கக்கூடிய ஒரு பெரும் தொழில் நகரமாக இருக்கின்ற காரணத்தினால் வாகனங்கள், போக்குவரத்துக்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அந்தச் சூழ்நிலையில் நகரத்தின் மையத்திலே ரெயில்வே இருப்புப் பாதையை இணைக்கக்கூடிய ஒரே ஒரு பாலம் மிகக் குறுகிய நிலையில் இருக்கின்ற காரணத்தினால் பல மணி நேரம் போக்குவரத்துக்கள் பாதிக்கக்கூடிய நிலை இருக்கின்றது. எனவே அதனுடைய தேவையைக் கணக்கில் எடுத்து அரசு அந்த புதிய பாலத்தை உருவாக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் இருக்கக்கூடிய இந்த மேம் பாலத்தைப் பொறுத்தவரையில், நீண்ட நாட்களுக்கு முன்னாலே கட்டப்பட்ட பாலமாகும். தற்போது அதை விரிவுபடுத்து வதற்கு இயலாத நிலைமையில் அந்தப் பாலத்தினுடைய வலிவு இருக்கிறது. எனவே உலக வங்கி நிதி உதவியுடன் நடப் பாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்த வேலையையும் நாம் தொடங்கலாம் என்று அரசாங்கத்திலே ஆலோசித்துக் கொண்டு இருக்கிறோம். இரண்டாவது கட்டமாக, அடுத்த ஆண்டு அந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்ட வேலைகள் தொடங்கும்போது திருப்பூர் நகரம் இரண்டாவது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அப்படி திருப்பூர் நகரம் அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும்போது இந்தப் பாலத்தினுடைய வேலைக்கு முன் உரிமை கொடுத்து நாம் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்ற அந்த விளக்கத்திற்கு மிக்க நன்றி, ஆகவே மிக நன்றாக நம்முடைய போக்குவரத்து அமைச்சர் அவர்கள் அந்தப் பாலத்தைப் பற்றியும் அந்த நகரத்தைப் பற்றியும் அறிவார்கள். ஆகவே அதை அடுத்த ஆண்டு நிறைவேற்றக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையை அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கேட்டுக்கொள்கிறார்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இம்மாதிரி போக்குவரத்து மிக அதிகமாக உள்ள காரணத்தினால் ஒவ்வொரு ஊரிலும் உள்ள ரெயில்வே லைன் களில் ஒரு அரை மணி நேரம், 20 நிமிடங்களுக்கு மேல் அங்கே வண்டிகள் நிறுத்தப்பட்டு பயணிகளுக்கு ஒரு சிரமமான நிலைமை உள்ளது உங்களுக்குத் தெரியும். எனவே இந்த ஆண்டு நம்முடைய அரசு தமிழகத்திலே எந்தெந்த இடங்களில் எத்தனை பாலங்களை அப்படிக் கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது? இரண்டாவது, உலக வங்கி உதவியோடு இங்கே பாலங்கள் கட்டப்படும் என்று....

1989 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது என்ன தொடர் வினாவா?

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியெல்லாம் கேட்கக் கூடாது. மூலக் கேள்வியோடு ஒட்டிய கேள்வியா? அதுவும் இரண்டு கேள்விகள் என்பது அதிகம். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எந்தெந்த வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன என்ற விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. குறிப்பாக திருப்பூர் நகரத்தில் இருக்கின்ற பாலத்தைப் பொறுத்தவரையில் அடுத்த ஆண்டு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திலே அங்கே எடுத்துக்கொண்டு செய்யலாம் என்று பதில் தந்திருக்கின்றேன். தமிழ்நாடு முழுவதும் இருக்கக் கூடிய இருப்புப் பாதையைக் கடக்கக்கூடிய இடங்களில் பல இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. நம்முடைய நிதிநிலைக்கு ஏற்ப அந்தப் பணிகள் எல்லாம் எதிர்காலத்திலே எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எம். சிரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து வளர்ச்சிகள் அதிகமாகும்படியான இந்தக் காலக் கட்டத்தில் பல்வேறு இடங்களில் பழுது அடையும்படியான நிலையிலும், மோசமான நிலையிலும் இருக்கும்படியான பாலங்கள் எல்லாம் சென்ற ஆண்டில் திட்டமிட்டும் நடைமுறைப்படுத்தாமல் இருப்பதை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளுமா? அதே போன்று மேட்டூர் பாலம் உடைந்ததாகக் கூறி 3 ஆண்டுகளாகப் போக்குவரத்து ஸ்தம்பித்து இருக்கிறதே, அது சம்பந்தமாக அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அவைகளை எல்லாம் பரிசீலித்து உரிய நடவடிக்கையை விரைவில் மேற்கொள்வோம்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிமுக்கியத்துவம் வாய்ந்த இதுபோன்ற ரெயில்வே பாலங்கள் அமைக்கும் பணிகளில் ஒரு சில தனியார்

வழக்கு மன்றங்களிலே வழக்குத் தொடுப்பதன் மூலம் தடுத்து நிறுத்துகிறார்களே, அப்படி வழக்குத் தொடுக்கின்ற உரிமையை ரத்துச் செய்யும் சட்டம் கொண்டுவரும் எண்ணம் அரசுக்குண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் வழக்குத் தொடுத்தாலும் நீதி நிச்சயம் பொதுமக்களுடைய நன்மையைக் கருதி கிடைக்கும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி மேம்பாலங்கள் கட்டுவதற்கு மத்திய அரசாங்கம் ஏதாவது நிதியுதவி செய்கிறதா? இல்லை எனில் அதைக் கேட்டுப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இது ஆங்காங்கே அமைந்திருக்கக்கூடிய பாலத்தினுடைய தன்மையைப் பொறுத்ததாகும். திருப்பூர் பாலத்தைப் பொறுத்தவரையில் அது முழுமையாக சாலைப் போக்கு வரத்துக்கு ஏற்றாற்போல் அமைக்கப்பட்டிருக்கிற ஒரு பாலமாகும். மற்ற பாலங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு இடத்திலேயும் ஒவ்வொரு மாதிரியான நிலைமைகள் இருக்கிற காரணத்தால் ரெயில்வே துறையும் சில இடங்களிலே நிதி வசதி தருகிறார்கள் அல்லது முழுமையாக மாநில அரசே அதை ஏற்றுக்கொண்டு செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிற சில இடங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குளித்தலையில் இருந்து முசிறி செல்லும் காவேரிப் பாலத்தில் ஒரு பாலம் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்டு, புரட்சித் தலைவர் அவர்களால் திறக்கப்பட்டது. அந்தப் பாலத்திலே 'லைட்' வசதி இருந்தும், இரவு நேரத்தில் எரியாத தால் போக்குவரத்து ஸ்தம்பித்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பாலத்தில் போகும்போது, போக்குவரத்து வாகனங்களில் லைட் இல்லையா அல்லது பாலத்தில் லைட் இல்லை என்று சொல்லுகிறார்களா?

திரு. அ. பாப்பா சுந்தரம் : பாலத்தில்.

1989 மே 11]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அது பற்றிக் கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 237 மற்றும் 238 மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு.

239—(*வினா எண். 159) திரு. கே. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு தனியாக ஏற்படுத்தவும், கோபால்ட் சிகிச்சையளிக்க கருவிகள் வாங்கவும் அரசு அனுமதித்துள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான வேலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: (அ) மற்றும் (ஆ): கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புற்று நோய் சிகிச்சைப் பிரிவுக்காக தனியாக கோபால்ட் சிகிச்சை அளிக்கக் கருவிகள் வாங்க அரசு அனுமதித்துள்ளது. இப்பிரிவிற்கான கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு கே. ரமணி: தலைவரவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புற்று நோய்க்கான உயர்ந்தபட்ச சிகிச்சை, கோபால்ட் ட்ரீட்மெண்ட் கொடுக்கவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்யவேண்டுமென்று சில ஆண்டுகளாகவே அந்தக் கோரிக்கை முன்வைத்து கேட்கப்பட்டுள்ளது. அரசு அதை சாங்ஷன் செய்திருப்பதாக முன்னேகூடச் சொல்லப்பட்டது. இந்தக்கருவிகளை வாங்க அவ்வளவு பெரிய கஷ்டம் இராது. இந்தக் கருவிகளுக்கு என்ன செலவாகும்? எவ்வளவு பணம் அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது? ஒரு டைம் நிர்ணயித்து, அதற்குள்ளாக அதை நிறைவேற்ற அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.